

கழக தணிக்கை குழு உறுப்பினர் தி.அ. முகமது சகி ஏற்பாட்டில் இடைத்தேர்தல் நடைபெறும் மதுராந்தகம் தொகுதியில் மதுராந்தகம் ஒன்றியத்திற்கு உட்பட்ட மோகல்வாடி முதல் நிலை ஊராட்சியில் மாற்றுத்திறனாளிகள் அணியின் சார்பில் தேர்தல் பிரச்சாரத்தில் மாநில செயலாளர் பேராசிரியர் தீபக் மாநில தலைவர் தங்கம் மற்றும் மாநிலத் துணைச் செயலாளர்கள் எழிலன். வேங்கை வெங்கடேஷ். வசந்த் ஜெயராமன். கருணாகரன் புஷ்பராஜ் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் வெங்கட், செங்கல்பட்டு ஊராட்சி கவுன்சிலர் மான் குமார் மற்றும் கழக உடன்பிறப்புகள் திரளானோர் கலந்து கொண்டு வாக்கு சேகரித்தனர்.





மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள மதுராந்தகம் தொகுதி கருங்குழி பேரூர் பகுதியில் உள்ள பல்வேறு இடங்களில் மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வீதி வீதியாக சென்று பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார் உடன் மாநில ஆதிதிராவிட நலக்குழு அணி செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி உள்பட திருவள்ளூர் மத்திய மாவட்ட நிர்வாகிகள் உள்ளனர்.

### தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துப் பெற்ற

# தட்டாஞ்சாவடி தொகுதி வேட்பாளர் சேதுசெல்வத்தின் வெற்றி உறுதி!

## முன்னாள் அமைச்சர் முனைவர் க. பொன்முடி நம்பிக்கை!



புதுச்சேரி, செப். 27-

புதுச்சேரி தட்டாஞ்சாவடி தொகுதி இடைத் தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் சேது செல்வத்தை ஆதரித்து தட்டாஞ்சாவடி தொகுதிக்கு உட்பட்ட கொட்டுப்பாளையம், புதுப்பேட், சுப்பையா நகர், குண்டு பாளையம் பகுதிகளில் தி.மு.க. தேர்தல் பொறுப்பாளர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி., துணைப் பொதுச் செயலாளர் க.பொன்முடி, மாநில அமைப்பாளர் இரா.சிவா ஆகியோர் தலைமையில் தி.மு.க. நிர்வாகிகள் வீடு, வீடாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.

தொடர்ந்து நேற்று முன்தினம் காலை கவுண்டம்பாளையம் பகுதியிலும் மாலையில் பாக்குமுடையான்பட்டு, கம்பளி சாமி மடம், ஆனந்தபுரம் பகுதிகளில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் க. பொன்முடி, திமுக மாநில அமைப்பாளர் இரா. சிவா, விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர் பொன். கொளதமசிகாமணி ஆகியோர் தலைமையில் தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் தி.மு.க. வேட்பாளர் சேது செல்வத்தை ஆதரித்து பிரச்சாரம் செய்தனர்.

அப்போது வாக்காளர்களிடம் பேசிய முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி, தட்டாஞ்சாவடி தொகுதியில் யார் ஜெயித்தால் தொகுதி மக்களின் அடிப்படை பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்பதை உணர்ந்தவர்கள். இப்பகுதி மக்களின் எழுச்சி மிகு வரவேற்பை பார்த்தாலே தெரிகிறது நிச்சயம் தி.மு.க. வேட்பாளருக்கு முழு ஆதரவு அளிப்பார்கள் என்று. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலின், இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் ஆசியுடன் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் சேதுசெல்வத்தின் வெற்றி உறுதி செய்யப்பட்டுவிட்டது. தி.மு.க. வென்றால் தான் புதுச்சேரியில் மாற்றம் ஏற்படும். இவ்வாறு பேசினார்.

வாக்கு சேகரிப்பின் போது, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி. அனிபால் கென்னடி, விழுப்புரம் தெற்கு மாவட்ட அவைத்தலைவர் ம. ஜெயச்சந்திரன், புதுச்சேரி மாநில மீனவர் அணி அமைப்பாளர் ந, கோதண்டபாணி உள்ளிட்ட பலரும் உடனிருந்து வாக்குகள் சேகரித்தனர்.

### மதுராந்தகம் தெற்கு ஒன்றியம் (28,09,2026) – அச்சிறுப்பாக்கம் மத்திய ஒன்றியம் (29,09,2026)

# கழக வேட்பாளர் இ.பரந்தாமன் வாக்கு சேகரிக்கிறார்!

## தொகுதிப் பொறுப்பாளர்கள் தா.மோ.அன்பரசன் – க.சுந்தர் அறிவிப்பு!





06.10.2026 அன்று நடைபெற உள்ள சட்டமன்ற இடைத்தேர்தலில் மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆசியுடன் மதச்சார்பற்ற முற்போக்கு கட்சிகளின் சார்பில் போட்டியிடும் தி.மு.கழக வெற்றி வேட்பாளர் - வழக்கறிஞர் இ.பரந்தாமன் மதுராந்தகம் தெற்கு ஒன்றியத்தில் நாளை (28.9.2026 - திங்கள்கிழமை) மற்றும் அச்சிறுப்பாக்கம் மத்திய ஒன்றியத்தில் நாளை மறுநாள் (29.9.2026 - செவ்வாய்கிழமை) உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரிக்க ஊராட்சி வாரியாக மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் வருகை தர உள்ளார்கள்.

அது சமயம் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் கலந்தாலோசித்து அனைவருக்கும் முறையாக தகவல் தெரிவித்து வாக்கு சேகரிப்பதற்கு எழுச்சியுடன் ஏற்பாடுகளை செய்து உற்சாக வரவேற்பையும் அளித்திடுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

### மதுராந்தகம் தெற்கு ஒன்றியம் – (28,09,2026 – திங்கள்கிழமை)

| வ.எண் | பகுதி | நேரம் | வ.எண் | பகுதி | நேரம் |
|---|---|---|---|---|---|
| 1. | சிறுகளத்தூர் | 7.00 | 14. | நேத்தப்பாக்கம் | 10.30 |
| 2. | ஐயனார்கோயில் | 7.15 | 15. | சிறுநல்லூர் | 10.45 |
| 3. | சிலாவட்டம் | 7.30 | 16. | அவரிமேடு | 11.00 |
| 4. | மேல் சிலாவட்டம் | 7.45 | 17. | சித்தரவாடி | 11.20 |
| 5. | கலைஞர் நகர் | 8.00 | 18. | ஜமீன் எண்டத்தூர் | 11.40 |
| 6. | அண்ணாநகர் | 8.10 | 19. | ஒழவேட்டி மருவளம் | 12.00 |
| 7. | வயலூர் | 8.20 | | | |
| 8. | பாக்கம் | 8.30 | 20. | சின்ன வெண்மணி | 12.15 |
| 9. | தாதாங்குப்பம் | 8.45 | 21. | அரியனூர் | 12.30 |
| 10. | ஆமையம்பட்டு புலிக்கொரடு வசந்தவாடி | 9.00 | 22. | நெசப்பாக்கம் | 12.45 |
| | | | 23. | பெரிய வெண்மணி | 1.00 |
| | | | 24. | நாகமலை, விராலூர் | 1.15 |
| 11. | வில்வராய நல்லூர் | 9.20 | | | |
| 12. | கெண்ரச்சேரி | 9.50 | 25. | பொளந்தங்கரனை | 1.30 |
| 13. | முதுகரை | 10.10 | | | |

### அச்சிறுபாக்கம் மத்திய ஒன்றியம் – (29,09,2026 – செவ்வாய்கிழமை)

| வ.எண் | நேரம் | பகுதி | வ.எண் | நேரம் | பகுதி |
|---|---|---|---|---|---|
| 1. | 7.15 | பெரும்பேர்கண்டிகை | 11. | 12.00 | வேலாமூர் |
| 2. | 8.00 | சிறுபேர்பாண்டி | 12. | 12.30 | பாதிரி |
| 3. | 8.15 | கல்லியகுனம் | 13. | 1.30 | காட்டுக்கரனை |
| 4. | 8.30 | பாபுராயன்பேட்டை | 14. | 1.45 | மதூர் |
| 5. | 9.00 | பொற்பனங்கரனை | 15. | 2.00 | கோட்டகயப்பாக்கம் |
| 6. | 9.30 | ஆனைகுன்றம் | 16. | 2.15 | விளங்காடு |
| 7. | 10.00 | எலப்பாக்கம் | 17. | 2.30 | திம்மாபுரம் |
| 8. | 10.30 | மோகல்வாடி | 18. | 3.00 | உத்தமநல்லூர் |
| 9. | 11.00 | ரெட்டிபாளையம் | 19. | 3.15 | திருமுக்காடு |
| 10. | 11.30 | இராமாபுரம் | 20. | 3.30 | சீதாபுரம் |

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி - மதுராந்தகம் தெற்கு ஒன்றியம் - அச்சிறுப்பாக்கம் மத்திய ஒன்றியம்

**தா.மோ.அன்பரசன் - க.சுந்தர்**

தொகுதிப் பொறுப்பாளர்கள்

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி

### சமத்துவ இலக்கியச் சங்கம் நடத்தும் – கவிவாணர் ரவிதாசன் எழுதிய

# 'கலைஞர் வென்ற கதை' நூல் வெளியீட்டு விழா!

## கவிஞர் முத்துலிங்கம் வெளியிட செ.தமிழ்வேந்தன் பெற்றுக் கொள்கிறார்!

சென்னை, செப். 27-

சமத்துவ இலக்கியச் சங்கம் நடத்தும், கவிவாணர் ரவிதாசன் எழுதிய 'கலைஞர் வென்ற கதை' நூல் வெளியீட்டு விழா இன்று (27.9.2026 - ஞாயிறு) மாலை 4 மணியளவில் பெரம்பூர் பேரக்ஸ் ரோடு, பெரம்பூர் பேருந்து நிலையம் அருகில் பெரம்பூர் மின்னரங்கத்தில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு கவிஞர் தளவை ராஜேந்திரன் தலைமை வகிக்கிறார்.

புலவர் சாமி நாகப்பன், எழுத்தாளர் கடலார், டாக்டர் கே.இ.செந்தமிழ் அரசு, கவிஞர் ஆசூர் தங்கதாசன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

விழாவில் 'கலைஞர் வென்ற கதை' நூலனை கவிஞர் முத்துலிங்கம் வெளியிட்டு சிறப்புரையாற்றுகிறார்.

திரு.வி.க. நகர் வடக்குப் பகுதிச் செயலாளர் செ.தமிழ்வேந்தன், பாவலர் பழனி, கவிஞர் ஞாலரவிச்சந்திரன் ஆகியோர் முதல் நூலை பெற்று கொள்கிறார்கள்.

ஆய்வரசர் வே. எழிலரசு நூல் ஆய்வுரை வழங்குகிறார்.

எழுத்தாளர் கண்மணி, நற்றமிழ்க் கவிஞர் ந.பாபு, வழக்கறிஞர் ஆர்.எம். தமிழ்ச்செல்வி ரமேஷ், மூ.சுடர் மா வளவன், கவிஞர் மு.ரவி, கவிஞர் சிங்கார சுகுமாறன், எம். கௌதமன், டாக்டர் எஸ்.லாரன்ஸ், திரைப்பட இயக்குநர் ஆர். ஜெ.நாகா ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

இதில் ப.கண்ணையா, கவிஞர் ஆசு, வி.பி.தயாளன், ஆர்.சண்முகம், தேவன்பு, கோவிந்தன், தங்க ஜெயபால் ஜோதி, எம்.ரூபநாதன், ஞானபாரதி, செந்தமிழ்தாசன், கனல் மணி, க.ஜெயபாலன், நா.மதுரை முத்து, நா.தங்கராஜ், பொன். மணிமாறன், மு.வீரமுத்து, சந்திரஹாசன், மணிநாத், குமரன் ராஜன், பி.இமயவர்மன், கு.சுதந்திரகுமார், இரா.விஜய கண்ணன், ரம்யா, இரா.பாண்டுரங்கன், ரீட்டா, ரயில் சந்திரன், சி.சௌரிராஜன், ச.சக்திவேல், சீனிவாசன், சோலை தமிழினியன், டி. ஜெயராஜ், முப்பரிமாண மோகன், வி.டில்லிபாபு, சுப.சந்திரசேகரன் ஆகியோர் நூலை பெற்று கொள்கின்றனர்.

விஜயலட்சுமி தாமோதரன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்குகிறார்.

கவிஞர் தமிழ் ராணா நன்றி கூறுகிறார்.

### மதுராந்தகம் இடைத்தேர்தலில் கழக வேட்பாளரை ஆதரித்து

# கிணார் ஊராட்சியில் பல்லாவரம் இ. கருணாநிதி தீவிர வாக்கு சேகரிப்பு!

## பகுதிச் செயலாளர்கள் இ. ஜோசப் அண்ணாதுரை – இ.எஸ். பெர்னார்ட் தலைமையில்!

பல்லாவரம்-செப்- 27

மதுராந்தகம் (தனி) சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் பல்லாவரம் வடக்கு மற்றும் தெற்கு பகுதிக்கு ஒதுக்கப்பட்ட கிணார் ஊராட்சி பகுதியில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் பல்லாவரம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி அவர்கள் பல்லாவரம் கழக நிர்வாகிகள் ஊராட்சி கழக நிர்வாகிகள் மகளிர் அணியைச் சேர்ந்த தாய்மார்கள் 200க்கு மேற்பட்டவர்களுடன் கழக இருவண்ணக் கொடி கழக வேட்பாளர் ஆதரித்த பதாகைகள் உதயசூரியன் படம் மேளதாளங்கள் முழங்க வீடு வீடாக சென்று வாக்காளர்களை நேரில் சந்தித்து கழக கழக அரசு செய்த பல்வேறு சாதனைகளான மகளிர் உரிமைத்தொகை நான் முதல்வன் திட்டம் இல்லம் தேடி மருத்துவம் இன்னொரு காக்கும் 48 போன்ற பல்வேறு சாதனைகளை விளக்கியும் ஊராட்சி பகுதி முழுவதும் அருமையான சாலைகள் மழைநீர் கால்வாய்கள் மேம்பாலங்கள் போன்ற மக்கள் நல திட்டங்களையும் எடுத்துரைத்து திண்ணையில் அமர்ந்து இத்தொகுதியில் வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினர் கட்சி மாறியதால் திணிக்கப்பட்ட ஒரு இடைத் தேர்தலை நாம் சந்திக்க வேண்டிய நிலைமை வந்துள்ளது ஆகவே நீங்கள் இதையெல்லாம் சிந்தித்துப் பார்த்து உதயசூரியனுக்கு வாக்களிக்குமாறு ஆதரவு திரட்டினார்.

பல்லாவரம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் மண்டல தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை பல்லாவரம் தெற்கு பகுதி கழகச் செயலாளர் இ.எஸ். பெர்னார்ட் மதுராந்தக தெற்கு ஒன்றிய செயலாளர் பொன். சிவக்குமார் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் ஜெ.அரசு பல்லாவரம் பகுதி கழக நிர்வாகிகள் கோ, ஞானகிராமன் ச, சிவக்குமார் க, ரமேஷ் கோ, கருணாமூர்த்தி ஜிஎஸ்டி தேவாராஜ், கிஷோர் கிணார் ஊராட்சி கிளைக் கழகச் செயலாளர் கள் வி. வேலாயுதம், கே. உதயகுமார் , எம். பழனி ஆகியோர் உடன் இருந்தனர்கள்.





மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து புக்கத்துறை ஊராட்சியில் பெரம்பூர் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் அ.முருகன் தலைமையில் மாவட்டப் பிரதிநிதி இ.சையத் அலிகான், உமா ஜான், பிரதிப், வழக்கறிஞர் சேனாதிபதி ஆகியோர் பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தனர்.



மதுராந்தகம் (தனி) இடைத்தேர்தலை முன்னிட்டு அருங்குணம் ஊராட்சி பாகம்238ல் அடங்கிய மேட்டு தெரு, தெற்கு தெரு, பிராமணர் தெரு, ஏரிக்கரை தெரு, புளியரணகோட்டை ரோடு, ஆகிய இடங்களில் ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளரும், 12வது மண்டல குழு தலைவருமான என். சந்திரன், தலைமையில் வீடு வீடாக சென்று நமது வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார்கள். இப்பிரச்சாரத்தில் 167 வது வட்ட கழக செயலாளர் ஜெ. நடராஜன், மாமன்ற உறுப்பினர் சாலமோன், கிளை செயலாளர்கள் ஏகாம்பரம், மாரியப்பன், சுரேஷ் குமார், மற்றும் கழக நிர்வாகிகள் பிரான்சிஸ், கந்தன், தயாளன், மகேந்திரன், அனைவரும் கலந்து கொண்டனர்.